மாலை முரசு

**February 27, 2016**

Malai Murasu, DT : 27/02/2016 / Page No: 7



முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாளையொட்டி அ.தி.மு.க. இலக்கிய அணி சார்பாக ஸ்டெல்லா மேரி கல்லூரியில் மகளிர் கூடைப்பந்து போட்டி நடத்த பட்டது. வெற்றி பெற்ற அணிக்கு அம்மா கோப்பையை அமைச்சர் பா.வளர்மதி பரிசாகவழங்கினார். கவுன்சிலர்கள்நுங்கை மாறன், டி.சிவராஜ்,புஷ்பாநகர் ஆறுமுகம், கல்லூரி முதல்வர், போட்டி நடுவர் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### அ.தி.மு.க. இலக்கிய அணி சார்பாக

# மகளிர் கூடைப்பந்து போட்டி!

## ஸ்டெல்லாமேரி கல்லூரியில் நடந்தது!!

சென்னை, பிப்.27-

அ.தி.மு.க. இலக்கிய அணி சார்பாக முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது, பொதுக்கூட்டம் நடத்துவது, பட்டி மன்றம்-விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசளிப்பது என்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளை இலக்கிய அணி செயலாளரும், சமூக நலத்துறை அமைச்சருமான பா.வளர்மதி செய்து வருகின்றனர்.

அந்த வகையில் இலக்கிய அணி சார்பாக மகளிர் கூடைப்பந்து போட்டி தேனாம்பேட்டை ஸ்டெல்லாமேரி கல்லூரியில் நடைபெற்றது. போட்டி ஒருங்கிணைப்பாளராக 118வது வார்டு கவுன்சிலர் டி.சிவராஜ் செயல்பட்டார்.

இந்த போட்டியில் ஸ்டெல்லாமேரி கல்லூரி அணி வெற்றி பெற்றது. அதற்கு அம்மா கோப்பையை அமைச்சர் பா.வளர்மதி பரிசளித்தார். கவுன்சிலர்கள் நுங்கை மாறன், புஷ்பா நகர் ஆறுமுகம் ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார்கள். மற்றும் வட்டச் செயலாளர்கள் இ.பச்சையப்பன், பந்தல் பாபு, எம்.ஜார்ஜ், ஏ.சாய்வில்லியம்ஸ், ஜெ.பழனிச்சாமி, வாட்டர் ஆரி, மார்ஷல், பலராமன் உள்பட பலரும் கலந்து கொண்டார்கள்.